# உருக்கு மனிதன்

**மேஜர் செல்வராசா மாஸ்ரர்**

**- அன்பு**

*(சின்னத்துரை செல்வராசா)*
*பிரதான வீதி, காங்கேசன்துறை.*
பிறப்பு:
17. 08 1961
வீரச்சாவு:
27. 08. 1990





செல்வராசா மாஸ்ரர்......

எமது இயக்கத்திலுள்ள கூடுதலான போராளிகளுக்குப் பரிச்சயமான ஒருவர்.

காரணம்- பல்லாயிரக்கணக்கான போராளிகள் அவராலேயே உருவாக்கப்பட்டனர்.

அவரிடம் நான் பயிற்சிபெறவில்லையே என்றதொரு ஏக்கம் அவரிடம் பயிற்சி பெறாதோருக்கு இருந்ததுண்டு. அவரிடம் பயிற்சி பெறாது விட்டாலும் பரவாயில்லை - சில மாதங்கள் அவருடன் கூட இருந்தாலே போதும், என்று கருதும் போராளிகளும் உண்டு. அவர்களில் நானும் ஒருவன்.

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப் படைகளுடன் சண்டை ஆரம்பமாகி

சுமார் இரண்டு மாதங்களின் பின்னர், வன்னியிலுள்ள விஸ்வமடுக் காட்டிற்குள் இருந்த முகாம் ஒன்றிற்குள் அவருடன் இருந்தேன்.

1987 ஆம் ஆண்டிற்கு முன்னர் சிறீலங்கா இராணுவத்துடனான சண்டைகளிலோ அல்லது முகாம் தாக்குதல்களிலோ, அதிகளவில் தான் கலந்துகொள்ளவில்லை என்று, செல்வராசா மாஸ்ரர் சிறிது கவலையுடன் கூறுவார். அதற்குக் காரணம், போராளிகளை உருவாக்கும் பயிற்சியாளனாக செல்வராசா மாஸ்ரர் தலைவரால் நியமிக்கப்பட்டதுதான்.

ஆனால் இந்திய இராணுவத்துடனான சண்டைகளில், வட்டியும் முதலுமாகச் சேர்த்து பல சண்டைகளில் மாஸ்ரர் கலந்து கொண்டிருந்தார். அதில் யாழ்ப்பாணத்திலுள்ள குளப்பிட்டிச் சந்தியில் இந்தியப் படைகளுடன் நடந்த சண்டை ஒன்றும், இணுவிலில் நடந்த சண்டை ஒன்றும் மாஸ்ரரின் திறமையைப் பறைசாற்றிய தாக்குதல் சம்பவங்களாகும்.

குளப்பிட்டிச் சண்டை நடைபெற்ற நேரம், இரண்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணத்திலே நின்றிருந்தனர். ஒருவர் 'இந்தியா ருடே' நிருபர்; மற்றவர் பிரான்சுப் பத்திரிகை ஒன்றின் நிருபர்.

இவர்கள் இருவரும் தாக்குதல் நடந்த இடத்துக்கு எமது போராளிகளால் கூட்டிச் செல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட இராணுவத்தினரதுஉடல்களும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் அவர்களுக்குக் காட்டப்பட்டன.

இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் எவ்விதம் சண்டைகள் நடைபெறுகின்றன என்பதை உலகம் முதலில் அறிந்தது, இந்தச் சம்பவத்தின்மூலம்தான். இதை ஆதாரங்களுடன்-படங்களுடன்-வெளிநாட்டு நிருபர்களே கொடுத்தபோது, உலகம் மூக்கில் விரலை வைத்தது.

இந்தத் தாக்குதலை எவ்விதம் தனது குழுவினர் செய்தனர் என்பதை, மாஸ்ரர் எமக்குச் செய்து காட்டுவார்; அவ்விதம்தான் எதிரியுடன் சண்டை செய்யவேண்டும் என்றும், எமக்குக் கற்பிப்பார்.

இதில் 12 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்: எமது தரப்பில் எவருமே இறக்கவில்லை.

அடுத்ததாக இணுவிலில் நடந்த ஒரு சண்டை. அதில், இந்திய அரசால் "வீர சக்கார" என்ற உயர்ந்த இராணுவ விருது கொடுத்துக் கௌரவிக்கப்பட்ட இந்திய அதிகாரியான மேஜர் பரமேஸ்வரன் கொல்லப்பட்டார்.

விடுதலைப்புலிகள்

குரல் - 17

ஆவணி - புரட்டாதி 1990

இந்தச் சண்டையைப்பற்றி மாஸ்ரர் சொல்லும்போது கூறுவார்: "இணுவிலில் ஒரு இடத்தால் இராணுவ அணியொன்று முன்னேறிக்கொண்டிருந்தது. சுமார் 50 பேர் வரை அந்த அணியில் இருந்தனர்.

இவர்கள் ஒரு பனங்கூடலூடாக வரும்போது, எமது போராளிகள் தாக்குதலைத் தொடங்கினர். சண்டை நீண்டநேரம் நடந்தது. எமது பக்கத்தில் நிலை எடுத்துச் சண்டை செய்ய, தகுந்தகாப்பிடங்கள் இருக்கவில்லை. அப்படியிருந்தும் எனது தலைமையில், தந்திரோபாயமும் துணிச்சலும் மிக்கவர்கள்மூலம் எதிரிகள் வீழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இறுதியில் 18 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருந்தனர். அதில் மேஜர் பரமேஸ்வரனும் ஒருவர். எமது பக்கத்தில் ஒரு போராளி வீரமரணமடைந்தார்."

இத்தகைய வெற்றிகரமான சண்டைகளில் ஈடுபட்டபின்னர், வன்னிக் காட்டிற்குள் முகாம் அமைத்துத் தங்கினார். காட்டுக்குள் இருக்கும்போது மாஸ்ரர் சும்மா இருக்கமாட்டார். எப்பொழுதும் ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருப்பார். அப்படியான நேரங்களில் மாஸ்ரர் சொல்வார்.....

"... இயக்கத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிமிடமும் ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருக்கவேண்டும்; அது இயக்கத்திற்குப் பயன் உள்ளதாகவும் இருக்கவேண்டும்."

உடற்பயிற்சிப் போட்டியொன்று வைத்தால் இயக்கத்தில் மாஸ்ரருக்குத்தான் முதல் இடம் கிடைக்குமென்று, எமது போராளிகள் சொல்வார்கள். காட்டு முகாமில் இருக்கும் போது அடிக்கடி எமக்கெல்லாம் அறிவுரைகள் கூறுவார்.

பொன்னம்மான், ராதா அண்ணை ஆகியோரைப் பற்றி அடிக்கடி கூறுவார். குழப்படி செய்யும் போராளிகளைத் திருத்துவதில், மாஸ்ரர் தனக்கே உரிய பாணிகளை வைத்திருக்கின்றார்.

ஒருமுறை இரண்டு போராளிகள் தங்களுக்குள் சண்டைபிடித்துக்கொண்டு கதைக்காது இருந்தனர். அவர்கள் இருவரையும் அழைத்து, ஒரு கோப்பையில் சாப்பாட்டை எடுத்துவந்து ஒருவர்மாறி ஒருவருக்கு ஊட்டுவித்தார் ''நாங்கள் எல்லோரும் சகோதரர்கள் போல இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் சண்டையிடக்கூடாது'' என்று அறிவுரை கூறி அனுப்பினார்.

காட்டுக்குள் இருந்த காலகட்டத்தில் உணவுகளுக்குப் பெருத்த தட்டுப்பாடு இருந்தது. அதுவும் இராணுவம் காடுகளுக்குள் இறங்கிய நேரங்களில் பட்டினியும் கிடந்திருக்கின்றோம்.

இந்த நிலையில் எந்த ஒரு உணவையும் உண்ணாது வீசுவதை மாஸ்ரர் அங்கீகரிக்க மாட்டார். சிலவேளைகளில் இரவு உணவு அடுத்த நாள் காலையில் மிஞ்சியிருக்கும் அத்துடன் சேர்த்து ஏதோ ஒரு காலை உணவும் சிறிது சமைக்கப்படும்.

அந்தப் புதுஉணவுக்காக எமது மனங்கள் ஏங்கும். ஆனால் அது எல்லோருக்கும் போதாது என்பதால், பழைய உணவையும் புதிய உணவையும் கலந்துவிட்டு, ''சரி இனிச் சாப்பிடுவோம்'' என்பார்.

இரண்டையும் கலந்தபின் அது இரவு சமைத்த உணவு வகையாகவும் இராது - காலை சமைத்த உணவு வகையாகவும் இராது - ஏதோ புதியவொரு உணவாகவும் புதியதொரு சுவையாகவும் இருக்கும். பெருமூச்சு விட்டபடி அதை உண்போம்.

ஒருமுறை 'ஒப்பரேசன் திரிசூலம்' என்ற பெயரில், நாம் இருந்த காட்டுப்பகுதியில் இந்திய இராணுவத்தினர் தேடுதலை நடாத்தினார்கள்.

அப்போது நடந்த சண்டையில் எமது இருப்பிடம் இராணுவத்திற்கு தெரியவர, புதிய இருப்பிடத்தைத் தேடினோம்.

அந்தச் சமயங்களில் எம்மிடம் உண்பதற்கு எதுவுமே இருக்கவில்லை; குடிக்க நீரும் கிடைக்கவில்லை.

அப்போது எமது ஒரு நேரச் சாப்பாடு மூன்று 'கிறீம் கிறேக்கர்' பிஸ்கற்றும், அரைக் கோப்பை தண்ணீரும்தான். அதுவும் ஒரு நாளைக்கு இரண்டு தடவைதான் உண்போம்.

அந்த நேரத்தில் எமது உடல் சோர்வடையும்; ஆனால் உள்ளத்தில் சோர்வு ஏற்படாதவாறு மாஸ்ரர் ஒவ்வொரு போராளியையும் ஊக்குவிப்பார்.

தனது வீரமரணத்துக்கு நான்கு வாரத்துக்கு முன்னர்தான் அவர் ஒரு பயிற்சி முகாமை நடாத்தி முடித்திருந்தார்.

அப்போது மாஸ்ரர் சொன்னார்.....

''நான் பலாலிப்பக்கம் போகின்றேன். இனி நான் இறந்தாலும் பறவாயில்லை. ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளை நான் உருவாக்கிவிட்டேன். இதற்கெல்லாம் காரணம் பொன்னம்மான்தான்; அவர்தான் என்னை உருவாக்கினார்.''

மாஸ்ரர் வீரமரணமடைந்த அன்று கூட, திருக்கோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்த - எமது போராளியின் குடும்பத்தவர்களில் ஒருவர், 'செல்வராசா மாஸ்ரர் இப்போது எங்கே நிற்கின்றார்? எனக்கு அவரை நன்றாகத் தெரியும்' என்றார்.

இப்படி போராளிகளுக்கு மட்டுமன்றி மக்களுக்கும் மாஸ்ரரைப் பற்றி, நன்கு தெரியும்.

அந்த செல்வராசா மாஸ்ரர் இன்று எம்முடன் இல்லை.

**- ஆனந்**

செல்வராசா மாஸ்ரர் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். சொந்த இடம், காங்கேசன்துறை. தந்தையின் பெயர் சின்னத்துரை; அவருக்கு இரண்டு கண்களும் தெரியாது. அந்த நிலையிலும்தான் செல்வராசா மாஸ்ரர் தன்னைப் போராட்டத்துக்கு அர்ப்பணித்தார்.

இவரது இயற்பெயர் செல்வராசா. ஆனால் இயக்கம் இவருக்கு இட்ட பெயர் அன்பு. மாஸ்ரருடன் சேர்ந்து இயக்கத்துக்கு வந்த அவரது ஊர்நண்பர்களால் 'செல்வராசா அண்ணை' என அழைக்கப்பட்டார். காலகதியில் பயிற்சி முகாமின் பயிற்சி ஆசிரியனாக வந்த பின்னர், அவரது மாணவர்கள் இட்ட பெயர்தான் 'செல்வராசா மாஸ்ரர்' என்பதாகும்.

1983 ஆம் ஆண்டு த. வி. புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்ட மாஸ்ரர், எமது இயக்கத்தின் 3 ஆவது பயிற்சி முகாமில் பயிற்சியைப் பெற்றிருந்தார்.

இவரது பயிற்சிமுகாமினது பொறுப்பாளராக லெப். கேணல் பொன்னம்மான் இருக்க, பயிற்சியாளராக லெப். கேணல் புலேந்தி அம்மான் இருந்தார்.

பயிற்சிக் காலகட்டத்தின்போதே செல்வராசா மாஸ்ரர் திறமைபெற்று, சகதோழர்கள் மத்தியில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தார்.

பயிற்சி நேரத்தின்போதே இவரது திறமையை, முயற்சியை, கட்டுப்பாடுகளுக்கு உட்படும் தன்மையை அவதானித்த புலேந்தி அம்மான், 3 ஆவது பயிற்சி முகாமின் மாணவனாக இருந்த செல்வராசா மாஸ்ரரை, அதே

பயிற்சிமுகாமின் பகுதிநேரப் பயிற்சியாளனாக இறுதியில் மாற்றிவைத்தார். அந்த அளவுக்கு மாஸ்ரர் உடற் பயிற்சியில் ஒரு புலியாக இருந்தார்.

பின்னர் நான்காவது பயிற்சி முகாமின் இறுதிக்கட்டத்தில், செல்வராசா மாஸ்ரரே பயிற்சியாளனாக இருந்தார்.

எமது இயக்கத்தில் பொன்னம்மானுக்கு அடுத்தபடியாக ஏராளமான போராளிகளை உருவாக்கியது, செல்வராசா மாஸ்ரர்தான்.

பலாலியில்...... அன்று செல்வராசா மாஸ்ரர் வீரமரணமடைந்துவிட்டார். செம்மண்ணான கட்டுவன் பகுதி, மாஸ்ரரின் குருதிபட்டு மேலும் செம்மையடைந்துவிட்டது.

செல்வராசா மாஸ்ரரின் கரத்தால் இனித் துப்பாக்கியை இயக்க முடியாதுதான்.

ஆனால்மாஸ்ரர் உருவாக்கிவிட்ட ஆயிரமாயிரம் போராளிகளின் கரங்களிலுள்ள துப்பாக்கிகள், ஆக்கிரமிப்பாளரின் அரண்களை நோக்கி முழங்கிக் கொண்டே இருக்கின்றன. அந்தத் துப்பாக்கி வெடிச்சத்தங்கள்தான் மாஸ்ரருக்குக் கிடைக்கும் அஞ்சலிக்கீதமாகும்.

— தினேஸ் ☆

## மாஸ்ரரோடு இருந்த போராளிகள் சொல்கிறார்கள்......

பயிற்சிக் காலகட்டத்தின்போது கட்டுப்பாடுகளைக் கருத்திலெடுக்காதும் ஒழுங்கின்றியும் குழப்படிகள் செய்து சிறுபிள்ளைத்தனமாகத் திரிபவர்களைப் பார்த்து, அடிக்கடி மாஸ்ரர் சொல்லுவார்: "...முதலில் நீ மனிதனாகு; பிறகு நான் உன்னைப் போராளியாக்குகிறேன்..."

⊙ ⊙ ⊙

"நாம் காட்டு வாழ்க்கையைச் சந்திக்கப் போகின்றோம். காட்டின் சூழலுக்கு ஏற்றவிதத்தில் நாம் வாழ வேண்டும். பசி எடுக்கும், பட்டினிகிடக்க நேரிடும்; களைப்பு எடுக்கும், தண்ணீர் கிடைக்காது; இவற்றுக்கு மத்தியில் எதிரி வருவான், நாம் உற்சாகத்துடனும் உறுதியுடனும் சண்டையிடவேண்டும்" என்று சொல்லுவார்

⊙ ⊙ ⊙



நாம் சமையலுக்கு என வைத்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் சாக்கினால் சுற்றப்பட்டிருக்கும்; அல்லது உருமறைப்பு வர்ணம் தீட்டப்பட்டிருக்கும்...

இருமல், தும்மல், பலமாகச் சிரித்தல், சத்தம்போட்டுக் கதைத்தல் தவிர்க்கப்படும்; அல்லது அந்த இடத்துக்கு மாஸ்ரர் வந்துவிடுவார்.

பானையும் கரண்டியும் மிக அவதானமாகக் கையாளப்பட வேண்டும். ஒரு சத்தமும் எழக்கூடாது. சத்தத்தை, மணத்தை எழுப்பக்கூடிய வறுவல் - துவையல் இருக்காது.

குளிக்கத் தண்ணீர் இல்லை. குடிப்பதற்கே ஒரு கோப்பை தண்ணீர்தான். ஆனால் துப்பாக்கிகள் எந்த நேரமும் துப்புரவாக இருக்க வேண்டும்.


⊙ ⊙ ⊙

காட்டுக்குள் மாஸ்ரர் அடிக்கடி கூறுவார்: "சத்தமும், வெளிச்சமும், மணமும் இங்கே எமது எதிரிகள்."

⊙ ⊙ ⊙

பல சந்தர்ப்பங்களில் நாம் நோயால் அவதியுற்றோம்; காய்ச்சலால் பலர் பாதிக்கப்பட்டனர். ஆனால் மருத்துவ வசதி இருக்காது; வேதனை அதிகமாக இருக்கும். அந்த வேளைகளில் மாஸ்ரர் அவர்களுக்கு அருகில் சென்றுவிடுவார். மனதுக்கு உற்சாகமூட்டும் கதைகளைக் கூறுவார். தாக்குதல் சம்பவங்களைக் கூறுவார். உடல் வேதனைக்கு இதமாகச் சதையினைப்பிடித்துவிடுவார். இவ்விதமாக, யாரும் படுக்கையில் சத்தமிட்டு முனகாதவாறு செய்துவிடுவார்.

ணமான கிராமிய வாழ்வை வாழ விரும்பிய பவானை ஒரு போராளியாக மாறும்படி, எங்கள் தேசத்தின் நிலைமைகளே நிர்ப்பந்தித்தன. தன் தாயை, தன் தங்கைகளை, அவர்களை மாதிரி ஆயிரமாயிரம் சகோதரிகளைக் காப்பதற்காக, அவன் ஆயுதம் ஏந்தவேண்டி இருந்தது.



பவான் ஒரு போராளியாக மாறிய பின்பு, தன் மண்ணை மீட்பதற்காக இரவு பகலாகச் செயற்பட்டான். அவனும் அவனது தோழர்களும் தொடர்ந்து - இடைவிடாத தாக்குதல்களின்மூலம் - சிங்கள ஆக்கிரமிப்பாளர்களை நிம்மதியாக, அமைதியாக வாழ விடவில்லை. ஆனால் ஒரு திட்டமிடப்பட்ட பெருங் குடியேற்றத் திட்டத்திற்கெதிராகவும், அதன் வலுவான பாதுகாப்பு இராணுவத்திற்கெதிராகவும், அவர்கள் போராடவேண்டி இருந்தது. சிங்களக் குடியேற்றவாசிகளின் மத்தியில் நிச்சயமற்றவாழ்வு நிலையைஏற்படுத்தி, அவர்களை வெளியேற்ற வேண்டி இருந்தது. எம்மவர்கள் நடாத்திய ஒவ்வொரு தாக்குதலும்ஒரு சிங்களக் கிராமத்தை அகற்றி இருக்கும்; அல்லது ஒரு புதிய குடியேற்றத்தை நிறுத்தி இருக்கும்.

*1986 -*

பவான், மேஜர் கணேஸ் அண்ணனுடன் இணைந்து சிறீலங்காப்படையினருக்கெதிரான பல தாக்குதல்களில் கலந்துகொண்டான். கடவான வீதியில் கடற்படையினரின் "ட்றக்" வண்டி மீதான கண்ணிவெடித் தாக்குதலும், எமது காவலைமீறி கட்டைபறிச்சான் பகுதிக்குள் நுழைய முயன்ற சிறீலங்கா இராணுவத்தினரை விரட்டியடித்த 5 நாள் யுத்தத்திலும், இவன் மேஜர் கணேசுடன் இணைந்து கொண்டான். அதன் பின்பு மேஜர் கஜேந்திரனுடன் இணைந்து பல தாக்குதல்களில் பங்குபற்றினான்.

காலம் அவனை ஒரு பொறுப்பு வாய்ந்த தளபதியாக வளர்த்தது. முதலில் ஒரு தாக்குதல் அணிக்குத் தலைமைவகித்துக் கொண்டான். அக்காலத்தில் (1987) 3 ஆம் கொலனியில் சிறீலங்காப் படையினர்மீது தாக்குதலை நடாத்தி இரு ஆயுதங்களையும், திருக்கோணமடுவில் சிறீலங்கா இராணுவத்தினர் மீது தாக்குதலை நடாத்தி இரு ஆயுதங்களையும், கைப்பற்றினான்.

அப்பொழுதெல்லாம், ஆட்களற்று வெறிச்சோடிப் போன அவனது கிராமத்தின் வீதிகளில் நடக்கையில் அவன் கூறுவான்:

'' மச்சான்! இந்த மண்ணில்தான் நான் பிறந்தனான். ''

'' இந்த வயலில்தான் நான் விதைச்சனான். ''

அவனது கண்களும் கைகளும் அவற்றை நோக்கி நீளும்.

'' ஆனால், எனக்கு ஒரு ஆசை. இந்த விடுதலைப் போராட்டத்தில் நான் சாகிறதாக இருந்தால் - இந்த மண்ணில்தான் ஒரு சண்டையில சாகவேணும். ''

இப்படித்தான் எங்கள் போராளிகளின் கனவுகளும் வித்தியாசமானவை. ஏனெனில், அவர்கள் இழப்புக்களையும் சாவையும் நெஞ்சில் நிறுத்திப் போராடும், உன்னதமான போராளிகள்.

வரலாற்றில் - எங்கள் விடுதலைப் போராட்டத்தில் - ஒரு மாறுதல் நிலை. எங்கள் சுதந்திரத்தை நாம் வென்றெடுப்பதற்காக, இந்தியப் படைகளிற்கெதிராகவும் நாம் போராடவேண்டி இருந்தது.

> சொந்தக் குடும்பத்தின் பிரச்சினைகளையும் நிகழ்வுகளையும் விட, சொந்த மண்ணின் பிரச்சினையும் நிகழ்வுகளும் பெரிதாகிவிட்டபோது, திருக்கோணமலை மண்ணிலிருந்து போராட்டத்துக்குள் புகுந்த ஒவ்வொரு போராளியினது வாழ்க்கையும் - இப்படித்தான்.

பவானும் பல முனைகளில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கெதிரான தாக்குதல்களை நடத்தினான். இதில் 1988 இலும் 1989 இலும் 3 ஆம் கொலனியில் நடாத்திய தாக்குதல்கள் குறிப்பிடக்கூடியவை, 1989 இல் நடந்த தாக்குதலில் இரு இந்தியச் சிப்பாய்களைக் கொன்று, அவர்களது இரு ஆயுதங்களையும் கைப்பற்றினான்.

1989 சித்திரையில் பவான் மூதூர் பிரதேச தளபதியாக நியமிக்கப்பட்டான்.

பின்பு தம்பலகாமப் பகுதிக்கு மாற்றலாகி, அங்கும் பல தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டான்.

தம்பலகாமத்தில் - 1989 மாவீரர் நாள் விழாவை, தேசத் துரோகிகள் இந்தியப் படையுடன் இணைந்து கலைக்க முயற்சிக்கையில், இரு தேசத்துரோகிகளைக் கொன்று, அவர்களது ஆயுதங்களையும் நான்கு நாட்களின் பின்பு, அதே இடத்தில் ஒரு இந்திய இராணுவ கப்டனைக் கொன்று அவனது ஆயுதத்தையும் கைப்பற்றினான். திருக்கோணமலையில் இந்தியப் படைகள் தம் இறுதித் தாக்குதலையும் இவனது அணிமீதே நடத்தினர். சூரங்கல்லில் நடந்த இந்த மோதலில் இந்தியப் படை பலத்த இழப்பைக் கண்டது. அம்மோதலில் எமது தரப்பில் திலகர் என்ற வீரவேங்கை வீரமரணமடைந்தான்.

தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த இந்தியப் படைகள் விலகியபின் - சிறீலங்காவின் படைகள் தம் பயங்கரவாதத்தை மீண்டும் தொடங்கிய நேரம், தமிழீழமெங்கும் பலத்த எதிர்ப்பினைச் சிறீலங்காப் படைகள் சந்தித்தனர். பவானும் தனது தோழர்களுடன் இணைந்து பல இடங்களில் இராணுவத்தினருக்கு எதிராகப் போரிட்டான். கிண்ணியா பொலிஸ் நிலையம், இராணுவ முகாம், தம்பலகாமத்திற்குள் நுழையும் இராணுவத்தினருடன் ...... என போர்கள் தொடர்ந்தன.

எமது முற்றுகையிலிருந்து மூதூர் இராணுவ முகாமை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்த சிறீலங்கா இராணுவ கொமாண்டோப் படையின் முதலாம் அணியை, கட்டைபறிச்சான் பாலத்தடியில் மறித்து எம்மவர்கள் தாக்குதல் நடாத்தியபோது - அத்தாக்குதலில் பவான் பாலத்தின் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக தாக்குதற் குழுவிற்குத் தலைமை வகித்து, தன் சகதோழர்களை உற்சாகப்படுத்தி, இயக்கி, அத்தாக்குதலின் வெற்றிக்கு வழிவகுத்தான், அத்தாக்குதலில் 62 இராணுவத்தினர் கொல்லப்பட்டு, பெருமளவிலான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அத்தாக்குதலின்போது அவனது வழிநடத்தல், தோழர்கள் மீது அவன் காட்டிய பற்று, அவனது திறமை அனைத்தையுமே, அத்தாக்குதலில் பங்குபற்றிய அவனது தோழர்கள் இன்றும் நினைவு கூர்வார்கள். அவனது சாதனைகள் தொடர்ந்தன.

> போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றைப்படைக்கும்சிருஷ்டிகர்த்தாக்கள், இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும். இந்த தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில், காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும். மாவீரர்களின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச் சுடரை ஏற்றும் நெருப்புக் கிடங்குகளாகும்.
>
> விடுதலைப் புலிகள்
> (குரல் - 26)

இறுதியில் - 3. 7. 1990

தம்பலகாமப் பகுதியிலிருந்து கிண்ணியாவிற்கு முன்னேறிய சிறீலங்கா இராணுவத்தினரை சூரங்கல் பகுதியில், பவானின் தலைமையில் எம்மவர்கள் இடைமறித்துத் தாக்கினார்கள். அத்தாக்குதலில் வேறொரு பகுதியில் போரிட்டுக்கொண்டிருந்த தோழனின் உதவிக்காக விரைந்த பவானின் நெஞ்சில் எதிரியின் குண்டுகள் பதிந்தன.

எங்கள் தேசத்தின்மீது தமது கால்களைப் பதித்த மிகக் கொடுமையான எதிரிகளை வீழ்த்தி, அவர்களது ஆயுதங்களையும் கைப்பற்றிய பின்பு, மேஜர் பவான் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டான். மேஜர் பவானுடன் ரஜனி, பல்லவன் என்ற இளம் புலிகள் இருவரும் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

அவனுடைய விருப்பப்படி அவனுடைய வீரமரணம் மூதூர் மண்ணில் இல்லைத்தான் - என்றாலும் தமிழ் மண்ணில்! ☆